உ

ஸ்ரீராமஜெயம்



# இராமாயண பால சிக்ஷை

(ஆறும் மலர்)

# வாலி வதம்


K. SUNDARAM IYENGAR.

STATION MASTER,

Southern Railway, TIRUCHIRAPPALLI.


3685

1952

General 24659
1970
3685

உ

ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்பிரும்ஹனே நம:

# இராமாயண பால சிக்ஷை

## வாலி வதம்

வாலி இந்திரன் மைந்தன், பராக்கிரமசாலி, கிஷ்கிந்தையில் வானர அரசனாக விளங்கினான். பிரதிதினமும் நாலு சமுத்திரங்களுக்கும் சென்று நித்திய கர்மாநுஷ்டானங்களைச் செய்து வருவது வழக்கம்.

இராவணன் பலத்திமிரினால் பலவான்களாகக்காண்பவர்களைவலுச்சண்டைக்கிழுக்கும் நோக்கமுடையவனாகையால் ஒருசமயம் கிஷ்கிந்தாபுரிக்கும் சென்று வானர மன்னனையும் அங்கனம் சண்டைக்கு அறை கூவுகிறான். அப்பொழுது வாலி ஸந்தியாவந்தனநிமித்தம் சமுத்திரதீரத்திற்குச் சென்றிருந்தான். இராவணன் அங்குச்சென்றுமறைமுகமாக வாலியினிடம் சேஷ்டை செய்ய ஆரம்பித்தான். இதை அறிந்த வாலியும் தந்திரமாகவே சடக்கென பின்புறத்தில் இருக்கும் இராவணனைக் கட்கத்தில் அமுக்கிக் கட்டிக்கொண்டு தன் காரியத்தையும் தொடர்ந்து மேர்க்கொண்டு இதரதிக்குச் சமுத்திரதீரங்களுக்கும் சென்று நீராடி கர்மங்களைச்செய்து முடித்துக்கொண்டு, தன் பட்டணம் வந்து சேர்கிறான். இராவணனால் திமிரமுடியவில்லை. அக்கட்டினின்றும்; தன்னைவிட வாலி பலவானெனவும் உணர்ந்து விட்டான். உடனேயே வாலியுடன் ஸக்யம் செய்து கொள்கிறான். இந்த உடன்பாடானது, பிறரால் அழிக்க முடியாததாயும், ஆயுட்பர்யந்தமுமிருப்பதாகிறதுமாகிய அன்யோன்ய ஸ்நேஹம்; இதனால் புதல்வர்களும், போகமும், வஸ்திரமும், போஜனமும், நகரமும், நாடும், பயிர்பூமிகளும், எல்லாமுமேஅவ்விருவருக்கும் பேதமின்றி அநுபவிக்கத்தக்கதாய் விளங்கவேண்டும் என்றே அக்னியை வளர்த்தி ஒருவரையொருவர் ஆலிங்கனம் செய்து கொண்டு சகோதரர்கள் போலிருப்பதை, நிச்சயித்துக் கொண்டார்கள். இதன் அறிகுறியாகவும் ஒருமாத காலம் இராவணன் கிஷ்கிந்தையில் வாலியுடன் தங்கியிருந்தபின் இலங்கைக்குச் செல்கின்றான்,

ஆரண்யத்தில் கபந்தன் என்னும் அரக்கனை (சாபத்தின் விளைவால் மாறின தனு என்னும் தேவன்) இராமர் வதம் செய்கிறாரல்லவா? அப்பொழுது கபந்தன் தன் பூர்வவிருத்தாந்

தத்தை தெரிவித்தும் சீதையைத்தூக்கிச்சென்ற அரக்கனைக் காட்டிக் கொடுக்கும் ஒருவனைத்தெரியப்படுத்துவதாகவும் சொல்கின்றான். அந்தப்பேர்வழிதான் சுக்ரீவன் சுக்ரீவனை வானரர்களில் உத்தமனெனவும் கூறுகின்றான் தனு. தமயனால் துறத்தப்பட்டு ரிஸ்யமூகபர்வதத்தில் வசிக்கின்றானெனவும் தெரிவிக்கின்றான். இங்கு தனுவான தேவன் வாலியைப்புகழ வில்லை; சுக்ரீவனையே உயர்த்தி இராமனுக்கு அறிவிக்கிறான். ஆக, வாலி ஒருவாறு குற்றவாளியாக ஏற்பட ஹேது உண்டு: தனுமேல் செல்லும் வழியை இராமனுக்குத் தெரிவிக்கிறான்; பம்பாஸரஸின் மேர்க்குக்கரையில் மதங்கமுனிவர் மதங்கவனம் உளது; அங்கு ரிஸ்யமூகபர்வதம் இருக்கிறது. அது ப்ருஹ்மா வினல் சிருஷ்டிக்கப்பட்டது. அந்த மலை உச்சியில், உரங்கும் ஒருவன் தன் ஸ்வப்பனத்தில் காணுவதையே அடைகிறான். அந்த பர்வதத்தின் விசேஷம் என்னவென்றால்:- லோகசம் பிரதாயங்களுக்கு மாறாய் தீய தொழில் புரியு மொருவன் இதில் ஏறக்கூடாது; அங்கனம் ஒருவன்அங்கு ஏறி வசித்தால் அவனைக் கொடிய அரக்கர்கள் கொன்று விடுகிறார்கள் என.

இங்கனம் கூறி மறுபடியும் கபந்தன் தன் சுயரூபத்தை அடைந்து ஆகாயத்தில் நின்று கொண்டு "உங்களது கார்யம் கை கூடுவதற்காக அங்கு எழுந்தருளப்படட்டும்; ஸக்யமும் செய்து கொள்ளப்படட்டும்,, எனவும் கூறுகிறான்.

இதனால் இப்பர்வதத்தில் ஏறியும், வசித்துக்கொண் டிருக்கிறவனான சுக்ரீவன் யாதொரு குற்றமும் இல்லாத வனென ஏற்படுகிறது. ஆம், அங்கு வசிக்கும் ஜீவ ஜந்துக்கள் கூட குற்றத்துக்குட்பட்டவர்களல்லவெனவேதான் மதங்க முனிவரின் அபிப்பிராயமும், ஆஞ்ஞையும். வாலி எப்பொழுது இங்கு வரமுடியாமலிருக்கின்றானோ அதனால் குற்றவாளியாகக் கருத இடமிருக்கிறது. ஒரு சமயம் எருமை உருக் கொண்ட துந்துபி என்னும் அரக்கனுடன் சண்டை செய்து வாலி அவனைக்கொன்று அவ்வுருவத்தைக் கோபம் மேலிட்டுத் தூக்கி வீசி எறிந்தானல்லவா? அந்தச்சரீரமும் இரத்தத்திவலைகளும் மதங்கரது ஆஸ்ரமத்தில் விழுந்து மதங்கரது சாபமும் வாலிக்கு ஏற்படுகிறது அப்பொழுது முனிவர் வாலியின் செயலைக்கண்டித்துக்கூறும்பொழுதுவாலியை,மூர்க்கனெனவும் கெட்டஎண்ணமுடையவனெனவும், மனம் போனபடி நடப்பவனெனவும், துஷ்டஸ்வபாவமுடையவனெனவுமல்லவா அபிப்பிராயம் கொள்கிறார்?

இராமர் அங்கனம் மேற்கொண்டு சீதையைத்தேடும் வண்ணம் பிரயாணத்தைச் செய்கிறாரல்லவா? ரிஸ்யமூக பர்வதத்தின் வழியே சென்று கொண்டிருக்கும் சமயம் தூரத்தில் வரும் இவ்விருதேஜோவான்களைக்கண்ட சுக்ரீவன் தன் மந்திரி ஆஞ்சநேயரை அனுப்பி, வரும் இருவீரர்கள் யார்

எனத்தெரிந்து வருமாறுகூற, ஹநூமான் உடன் சென்று வெகு அழகாக அவர்களுடன் சம்பாஷணை நடத்தும் சமயம், சுக்ரீவனுடைய விருத்தாந்தங்களைத் தெரிவிக்கின்றார். இங்கு சுக்ரீவன் வாலியினால் ராஜ்யத்திலிருந்து துறத்தப்பட்டும் மனைவியையும் அபஹரிக்கப்பட்டவனாயும், துன்புறுத்தப்பட்டவனாகவும் கூறுவதிலிருந்து வாலிஒருவாறு குற்றவாளியெனவே தான் ஹநூமான் கருதுகிறார் போலும்.

சுக்ரீவனை நன்கறிந்து கொண்ட இராமன் (வாலியையும் தெரிந்தே) வாலியை வதைக்கவும் சுக்ரீவனைக் காப்பாற்றவும் பிரதிக்ஞை செய்கின்றார்.

இதே காலத்தில் தர்மத்தின் அறிகுறியாக ஓர் சம்பவம் நிகழ்கின்றது. மூவர்கள் கண்கள் துடிக்கின்றன, அதாவது செந்தாமரை போன்ற சீதா தேவியினது இடது கண்ணும் அக்னியை நிகர்த்த இராவணனது இடது கண்ணும். பொன்னை நிகர்த்த வாலியின் இடது கண்ணும். இதன் பொருள் ஸ்திரீகளின் இடது கண் துடிப்பதானது க்ஷேமத்தைக்கருதுவதெனவும், புருஷர்களின் இடது கண் துடிப்பதானது விபரீதத்தை விளைவிக்குமெனவும், தெரிவிக்கும் அடையாளங்கள். இராமனின் பிரதிக்ஞையும் இத்தர்ம அறிகுறிகளையும் கலந்து ஆலோசிக்குமிடத்து இராமனின் (வாலியைப்பற்றிய) அபிப்பராயம் சரியே எனத்தான் முடிவு கட்டவேண்டும்,

போனது போகட்டும் கடைசியாக சுக்ரீவனை வாலியினிடம் அனுப்பிஎங்கனம் வாலி தம்பியினிடம் நடந்துகொள்கின்றான் என்பதைத் தெரிந்து கொள்ளச் சந்தர்ப்பம் அளித்தாரல்லவா இராமன்? அப்பொழுதாவது வாலி தன்குற்றத்தை உணர்ந்து சுக்ரீவனை வரவேற்கிறானா? இல்லை. வாலியோவெனில் முரட்டுத்தனத்துடன் விரட்டியடித்து விடுகிறான்,

## தாரையின் உபதேசம்:—

இரண்டாம் தடவை சுக்ரீவன் வாலியைப் போர்கழைக்கின்றான் கர்ஜனையுடனும் இராமனது இறுதியான தீர்மானப்படியும் [இங்கு இராமனது அபிப்பராயம், முதல்நாள் தோற்று ஓடின சுக்ரீவனே உடன் வந்திருக்கிறனே, அதன் எண்ணத்தை உணர்ந்து ஒருக்கால், வாலி விஷயங்களை நன்காலோசித்து தன் பிழையைஉணருகிறானவென்பது போலும் ]தாரையுடனிருக்கும் வாலியின் செவிகளில் சப்தம் விழுகிறது. கோபம் மேலிட்டு விரைந்து கிளம்புகிறான் வாலி, பதிவிருதையான தாரையின் மனமோ கலவரமடைகிறது, தீர்க்காலோசனை செய்து தன் நாதனுக்கு நன்மையை விளைவிக்குமாறு போருக்கு அப்பொழுது போவதைத்தக்க காரணங்களுடன் தடுத்துக் கூறுகிறாள். (ஏன் உபதேசம் செய்கிறாள்.) ஏவலாட்கள் மூலமும் மைந்தன் மூலமும் தான் அறிந்து கொண்டதான ஸ்ரீராமனின் வரவையும்

அதிலும் சுக்ரீவனுடன் செய்து கொண்ட நட்பையும் ஸ்ரீ ராமனின் குணாதிசயங்களையும் வீரியத்தையும் நன்கு எடுத்துக்கூறுகிறாள்.

வாலியோ தாரையின் வார்த்தைகளைப் புறக்கணித்து விட்டுக்கூறுகிறான் — ஸ்ரீ ராமன் தர்மஸ்வரூபி, தகாத காரியத்தைச் செய்யமாட்டான் எனவும்,

சுக்ரீவனுக்கும் வாலிக்கும் கடுமையான முஷ்டி யுத்தம் நடந்தே தீருகிறது. முன்தீர்மானப்படியே ஸ்ரீ ராமன் வாலியின் வதையைத் தீர்மானித்து ஓர் சாதாரண சரத்தை (இரும்பு மயமான பாணமுமல்ல, அஸ்த்திரமுமல்ல) வாலியின் மேல் விடுகிறார் சரமும் வாலியின் மார்பில் தைத்து வீழ்கின்றான். ஆனால் வாலியின் மேனியோ குன்றவில்லை உயிரும் உடன் போக வில்லை ஸ்ரீ ராமபிரானும் சத்தியத்தின் மேல் ஆணையிட்டு இச்சரத்தைப்ரயோகித்தார் போலும். இதனால் விதியின் பயனுக்கு இப்பாணம் ஓர் உதவியைச் செய்திருக்க வேண்டு மெனவும் ஏற்படுகிறது. இராவணன் மீது பல கோரமான பாணங்களையும் அஸ்த்திரங்களையும் ப்ரயோகித்த இராமன் ஏன் இவ்வாலியின் மேல் ஓர் பெரிய அஸ்த்திரத்தை விடுக்க வில்லை என்பதான கேள்வி ஒன்று எழுகிறது. ஆம். இராவணனையே கட்டிய வாலிமேல் மிகவும் பெரிய பாணங் களைத்தான் உபயோகித்திருக்கவேண்டும். எப்பொழுது அங்கனம் ஸ்ரீ ராமன் செய்யவில்லையோ அதை நாம் சற்று யோசிக்கத்தான் வேண்டியிருக்கிறது மேலே கண்ட பிரகாரம் தான் நாம் முடிவுக்கு வரஹேதுவாகிறது.

மேல் நடப்பதைக் கவனிப்போம்; வாலி அடிபட்டு மூர்ச் சித்துச் சற்று தெளிந்து இராமபாணமென்றறிந்து ஸ்ரீராமனுடன் வாதாடுகிறான் கோபத்துடனும்; அறியாமை யாலும் அச்சந்தர்ப்பத்தில் புத்தி மாருட்டம் இயற்கை யேயல்லவா? வாலியின் கேழ்விகளையும் ஸ்ரீராமனின் சமாதானங் களையும்கவனிப்போம்.

வாலியின் கேள்வி:— உமது நாட்டில் நான் யாதொன்றும் செய்யவில்லையே; நீர் இதில் தலையிடக்காரணமென்ன?

இராமனின் பதில்:— மலைகள், வனங்கள், உபவனங்கள் அடங்கியஉலகமும், மிருகங்கள் பக்ஷிகள்,மானிடர்கள் இவர்களை ரக்ஷித்தல், சிக்ஷித்தல் முதலியன இக்ஷ்வாகு மன்னர்களையே சார்ந்தது என்பது நீ தெரிந்து கொள்ளவில்லை; தர்மத்தின் நுட்பங்களை நன்கறிந்த ஞானவானான, அவ்வம்சத்து அரசனான பரதனே, இப்பொழுது ஆண்டுவருகிறான். உனக்கென்று நாடு கிடையாது. எவனொருவனிடத்தில் சத்தியம் ராஜநீதி, பெரியோர்களிடத்தில் பக்தி முதலியன குடி

கொண்டிருக்கின்றனவோ அவனுகிய பரதன்தான் சக்ரவர்த்தியாக இருக்கமுடியும். அதே நோக்கங்களையுடைய நாங்களும் தர்மத்தை நிலைநாட்டும் பொருட்டு சஞ்சரித்துக்கொண்டிருக்கிறோம். பரதனது அங்கீகரித்தலையே நினைத்துத் தர்மத்தைப் பரிபாலிக்கிறோம்.

வாலியின் கேள்வி;— கனி, கிழங்குகளை உணவாகக் கொண்டு காட்டில் வசிக்கும் மிருகங்களான வானரர் ஒருவருடன் மற்றொருவன் போர்புரிவதில் நீர் ஏன் தலைப்பட்டீர் உமக்குக் காட்டில் ஆவதென்ன?

இராமன் பதில்;— உன் அபிப்பிராயப்படியே நீ மிருகமெனக் கூறுவதால் நீ நன்கு சிக்ஷைபெருதவன், சபலசித்தன்; எனவும் விஷயங்களை நன்கறிந்து கொள்ளும் திறமையும் இல்லாதவன், என்பதால் தர்மநுட்பங்களை எவ்வாறு அறிந்து கொள்ள முடியும்?

[இந்தக்கேள்வி வாலியைப்போன்ற ஓர் தேவப்பிறப்புற்றவன், அதிலும் இந்திரன் மைந்தன் கேட்பதே சரியல்ல தவிர இவன் கேவலம் மிருக சம்பிரதாயங்களை அநுஷ்டித்தவனுமல்லவென்பதானது, தான் பிரதிதினம் செய்து வந்த நித்திய கர்மாநுஷ்டானங்களால் வெட்ட வெளிச்சமாகத் தெரிந்த விஷயமேயல்லவா?]

வாலியின் கேள்வி:— நான் ஒரு பாபத்தையும் அறியவில்லையே நீர் என்னை அடித்தது தவறல்லவா?

இராமன் பதில்,— நீ அறங்குன்றியவன், காமவெறியில் மூழ்கிவிட்டவன், தம்பியையும். புதல்வனையும், சிஷ்யனையும் புத்திரனுகவல்லவோபாவிக்கவேண்டும்? அப்படியிருக்க தம்பியின் மனைவியுடன் கூடிக்குலாவுகின்ற அதர்மிஷ்டன் நீ; இப்பாபத்தை அறியாமலிருக்கின்றனை. தம்பியின் மனைவியைக் கற்பழித்தலுக்கு வதைதான் தண்டனை என்று தர்மஸாஸ்த்திரம் நன்கெடுத்துக் கூறுகிறது.

வாலியின் கேள்வி:— என்னை அடித்ததின் சரியான காரணம் என்னவென்பதைக் கேட்கின்றேன்.

இராமன் பதில்:— நீ தர்மசாஸ்திரம் தெரிந்ததாகப் பல கூறினையேயொழிய பரிபூரண ஞானமில்லாததால் தர்மத்தின் நுட்பத்தை நன்கு தெரிந்து கொள்ளாமலே என்னை நிந்திக்கிருய். தம்பியின் மனைவியுடன் புணர்தல் தருமவிருத்தமல்லவா? இது ஒன்றே சான்ருகும். குறங்கின் குறுகுறுத்தன்மையேதான் மேலிட்டிருக்கிறது; உனக்கு ராஜநெரியில் பற்றற்று

தர்மத்தினின்று விலகி தம்பியின் மனைவியை கற்பழித்ததினால் இத்தண்டனை உனக்கேற்பட்டது என்பதை அறியவும்.

வாலியின் கேள்வி;— மனம் போனபடி ஏன் இப்படி நீர் செய்கைகளைச் செய்கின்றீர்; சிக்ஷிக்கின்றீர்?

இராமன் பதில்:— மனம் போனபடி நடைபெறவில்லை; நாங்களும் அதில் ஈடுபடவில்லை, உன்வதையானது தர்மானுசாரமாகத்தான் ஏற்பட்டிருக்கிறது. பரிதாபப்படவேண்டாம். நீ மனதை சீர்படுத்திக் கொண்டு கவனிக்கவும். நற்குலத்தில் பிறந்த க்ஷத்திரியர்களான நாங்கள் உனது பாபச்செயலை ஒருக்காலும் மன்னியோம்.

[வாலியே மனம் போனபடி நடப்பவன் என்பதை அன்று மதங்கமுனிவரே கூறியும், பட்டமும் சூட்டியிருக்கிறார் என்பதை இங்கு ஞாபகப்படுத்திக் கொள்ளலாம்]

வாலியின் கேள்வி;— உன்காரியங்களில் தலையிடாத எங்களிடத்தில் இந்த பராக்கிரமம் செய்ததானது அபகாரம் செய்தவர்களிடத்திலும் கூட நான் காண வில்லை ஏன்?

இராமன் பதில்:— எனக்கு அபகாரம் செய்யவேண்டுவது அவசியமில்லை. நீ செய்த தர்மவிருத்தமான காரியத்திற்கு வதமானது எப்பொழுது ஏற்பட்டிருக்கிறதோ அதைச்செய்யும் கடமையை. சக்ரவர்த்தி பரதனைச் சேர்ந்தவனான நானும் இதர மன்னர்களும், மேற்கொண்டுள்ளோமாகையால் உன்னை வதம் செய்தே ஆகவேண்டியது தர்மம். உன்னை தண்டித்ததினால் நீ செய்தபாபம் நீங்குகிறது, நானும் என் கடமையைச் செய்யத்தவராததால் பாபத்தையும் அடையவில்லை.

வாலியின் கேள்வி.— அது போகட்டும் நீர் நேரில் நின்று போர் புரியவில்லையே; மறைந்திருந்தே அடிக்கப்பட்டேன் இது தர்மமா?

இராமன் பதில்:— தர்மநுட்பங்களான காரணங்கள் ஒரு புறமிருக்கட்டும்; உன் அபிப்பிராயப்படி நீ மிருகம் எனவும் மிருக சம்பிரதாயங்களையே கைக்கொண்டவனெனவும் கூறினாய்; ஆக வானரோத்தம; துஷ்ட மிருகங்களை எதிர் நின்று போர் புரிந்தாலும் சரி. மறைந்திருந்து போர்புரிந்தாலும் சரியே, பயந்து ஓடினாலும் சரியே, அவைகளை வேட்டையாடப்படுகின்றன; வெட்டித்தள்ளப்படுகின்றன;என்றல்லவோ சாஸ்த்திரங்கள் அனுமதிக்கின்றன? ஆக நீ எவ்

வகையிலும் கொல்லத்தக்கவனே இதில் எனக்கு அற்பத்தனமொன்றும் இல்லை, இராஜாக்களும் மானிட உருவம் கொண்டு பூமியை ஆளுகின்றனர்; இக்காரியங்களையும் செய்கின்றனர்.

[இங்கு ஒரு ரஹஸ்யம் கவனிக்க இடமுண்டு:- இராமன் நேரில் நின்று யுத்தம்புரிய நேரிட்டால் ஒருக்கால் மஹா புருஷனான இராமனின் தர்சனத்தால் சரணாகதியடைந்தானே யானால், வாலி செய்த குற்றத்திற்குத் தகுந்த மரண தண்டனை நடைபெறாமல் விக்னம் ஏற்படலாம்; அதனால் குற்றத்தைச் செய்தவனை சிக்ஷிக்காத பாபமேற்படலாம்; இராமனின் பிரதிக்ஞைக்கும் விரோதமாகும் போலும்.]

வாலியின் கேள்வி;— யாது காரணமாய் சுக்ரீவனுடன் நட்புக் கொண்டு அவனுக்கு நன்மைசெய்ய எண்ணங் கொண்டீரோ, அந்தக்காரியத்தில் என்னை நியமித் திருப்பீரானால் ஜானகியை நான் தக்ஷணமே கொண்டு வந்திருப்பேனே?

இராமன் பதில்:— சுக்ரீவன் குற்றமற்றவனெனவும், நீ குற்றம் புரிந்தவனெனவும் தக்ககாரணங்களால் தீர் மானித்து சுக்ரீவனுடன் ஸ்நேகம் செய்தேன், உன்னையும் சிக்ஷக்ஷிக்க எண்ணினேன். சீதையை இராவணனிடமிருந்து மீட்டுக் கொண்டுவருதல் என்ற தர்மச்செயல் உன்னால் நடைபெறாதகார்யமுமே ஏனெனில் நீ உன் உயிர்த்தோழனான இராவணனுடன் செய்து கொண்ட நட்பை சற்று ஞாபகப்படுத்திக் கொண்டால் உனக்கே நன்கு விளங்கும், அதாவது நீங்கள் இருவரும் எதையும் பங்கிட்டுக்கொண்டு அனுபவிப்பதென்பதான உடன்பாடல்லவா? இதை நீ மீறமாட்டாய்,

வாலி பின்னும் கூறுகின்றான். கேட்கின்றான் இராமனை "உம்மை நான் அவமரியாதை யாதொன்றும் பண்ணவில்லை; அப்படியிருக்க நீர் இதில் தலையிட்டது எங்கனம்" என.

இதற்கு நாமே சற்று யோசிப்போம் மண்டலாதிபதியான ஓர் அரசன் தன் நாட்டினருகே வந்திருக்கும்பொழுது, வாலி உபசரிக்காமலிருந்ததும் ஓர் குற்றமாகக்கருதலாம், தவிர சீதையைக்கவர்ந்து சென்ற இராவணனை தன் நண்பனெனக் கருதியே கவனியாமலிருந்ததும் குறிப்பிடவேண்டியிருக்கிறது. வானர மன்னனுக்கு தன் எல்லைக்குள் நடக்கும் முக்கிய காரியங் களையும், பெரியோர்கள் வரவையும் அவ்வப்பொழுது இரகசிய உத்தியோகஸ்தர்கள் தெரிவித்துத்தான் இருக்கவேண்டு மென்பதும் அக்காலத்திய நடைமுறையும், அநுஷ்டானமும் அதுவும்சரியே; தாரையே முன்னதாகவும் இதைத்தெரிவித் திருக்கிறாளல்லவா? தவிர வாலியே வெளியிட்டுக்கூறிகிறான்.

"விஷயாதி நுட்பங்களை நன்கு அறிந்து ஹிதோபதேசம் செய்த தாரையின் சொல்லைப்புறக்கணித்தேனே அதுவும் அசட்டுத்தனத்தாலல்லவா?" என இதில் தானே ஒப்புக் கொள்கிறான் பிழையை,

வாலி பாணத்தாலடிபட்டுக்கிடக்கும் பொழுது, பக்தி யுடனும் பரிதாபத்துடனும் புலம்பும் பதிவிரதையான தாரை, தன் நாதனுடைய மரணத்தைக் குறித்துக்கூறுகிறாள்.

"வானர மன்னா! இந்த மரணத்திற்குக்காரணம் நீர் தம்பி சுக்ரீவரது மனைவியை அபகரித்தும் அவரையும் நாட்டை விட்டுத்துரத்தப்பட்டதுமானதின் விளைவு" என

வாலி இராமனின் சமாதானங்களான வசனங்களைச் செவியுற்று மனதில் ஆலோசித்து தன் குற்றங்களை உணர் கின்றான் (சத்புருஷனான இராமனின் தரிசனமான உடன் ஏன் ஒருவனுக்கு நல்ல எண்ணங்கள் உதயமாகாது?) இராமனை அவதூராகப்பேசியதற்கு வருந்தி மன்னிப்புக் கேட்கின்றான். தன்னுடைய அறிவின்மையால்; நிஷ்டூரச்சொற்களால் ஏற் பட்ட அபசாரங்களை திருவுள்ளத்தில் பற்றாமலிருக்குமாறு வேண்டுகிறான் இராமனைப் புகழ்ந்தும். பகுத்தறிவில் நிபுண ரெனவும், ரக்ஷகர் எனவும் மீளவும் போற்றுகிறான்.

வாலியின் உயிர் துறக்கும் சமயம் நெருங்குகிறது, சுக்ரீவனை கண் விழித்துப்பார்த்துக்கூறுகிறான். "செருக்கினாலும் மதிமயக் கத்தாலும் வசப்பட்டு நான் குற்றத்திற்குள்ளானேன். ஆனால் நீ அக்குற்றத்தைமறந்துவிடுக;நான் யமபட்டணம் போகிறேன் இந்த வானரராஜ்யத்தை ஏற்றுக்கொள்; அங்கதனைப்புத்திரன் போல் பாவித்து அவனை எக்காலத்திலும் காப்பாற்றுக. இதோ இருக்கும் தாரையோ காரியங்களின் நுட்பங்களை ஆராய்ந்தறி வதில் எவ்வகையிலும் தேர்ச்சி பெற்றவள்; அவள் அனுமதி யுடன் செய்யும் கார்யங்களில் பிழையே இராது; தர்ம மூர்த்தி யான ஸ்ரீ ராமனின் மனங்கோணாது நடந்துகொள்; இதோ இந்த பொன்மயமான காஞ்சனமாலையை உயிர்போகுமுன் பெற்றுக்கொள்" என. இந்த மாலையின் ரஹஸ்யம் யாதெனில் வாலி உயிர்போனபிறகு அணிந்திருந்தால் மாலையின் லக்ஷ்மீகரம் போய்விடும்; அதற்குள் வாலி பிறருக்குத்தந்தருளினால் தரித்துக் கொள்பவன் எல்லா சம்பத்துடனும் கூடி புகழ்பெறுவான். தன் குமாரன் அங்கதனுக்கும் அநேக புத்திமதிகளைக் கூறி வாலி உயிர் துறந்தான்; ஸ்வர்க்கமும் அடைந்தான். தாரையின் சோகத் திற்கோ அளவில்லை பின்னும் கதறிக்கொண்டே நாதனிடம் மனதைச்செலுத்திய வண்ணமே இருந்தாள்; என் செய்கிறது விதியின் பயனல்லவா? ஆம் ஒருவன் முன் செய்த புண்ணிய பாபச்செயலின் விளைவுதான்.

சுக்ரீவனும் மிகவும் மனம் நொந்து தமயன் தன் காரணமாகவே கொல்லப்பட்டாரென வருந்தி இராமனிடம், தான் அக்னிப் பிரவேசம் செய்வதாகவும் கூறுகிறான், (இங்கு பாருங்கள் சகோதர வாத்ஸல்யத்தை.)

வாலி செய்த குற்றத்திற்கு மரண தண்டனையே சம்மானம் என்று தர்மசாஸ்த்திரங்கள் கூறினும், அதை அந்த தண்டனையை யார் நடப்பிப்பது என்ற ஓர் சந்தேஹம் வரலாம். இராமனைப் போன்ற அரசர்கள் தான் தண்டிக்க உரியவர்கள் எனவல்லவோ நாம் முன்னமேயே பரிசீலித்தும் தீர்மானமும் செய்துள்ளோம்? தவிற இதை இராமன் செய்ததானது மிகவும் உசிதமே; ஏனெனில் ஓர் குற்றமுடையவனோ, ஒழுக்கம் குன்றியவனோ. தர்மத்தின் நுட்பங்களை நன்கறியாதவனோ, செய்வதானது மட்டம்தானே? இங்கு இராமனோவெனில் சத்திய சந்தனாகவும். யாதொரு அதர்மச்செயலும் புரியாதவனாகவும், அதிலும் வாலிசெய்த குற்றம் மாதிரியானவைகளில் ஈடுபடாத அவதார மூர்த்தியல்லவா? ஆம் முன்னமேயே கைகேயீதேவியாரும் இராமனைப்பற்றி (பரதனிடம் கூறும் பொழுது) இராமன் பரஸ்திரீயைக் கண்ணெடுத்தும் பாராதவனென கூறவில்லையா? அப்பேர்ப்பட்ட இராமன் இம்மாதிரியான குற்றம் செய்த வாலி போன்றவனை வதைப்பதானது மற்றோர் தண்டிப்பதைப் பார்க்கினும் நியாயமே என்பது மிகவும் சரியே, தீர்க்கதர்சனியான தாரையும் இதை உணர்ந்தே தான் ஸ்ரீ ராமனைப் போற்றுகிறாள். தன் நாயகனை வதைத்த இரகுவீரனை தர்மத்திற்கு உகந்தவார்த்தைகளையே கூறி இராமனின் குணாதிசயங்களையும் புகழ்கிறாள்.

இறுதியில் ஸ்ரீ ராமபிரான் எல்லோரையும் தகுந்தலோக சம்பிரதாயங்களினால் தேற்றி வாலியின் ஈமக்கிரியை நடந்த பிறகு நண்பன் சுக்ரீவனுக்கு பட்டாபிஷேகத்தையும் செய்வித்து, மகிழ்வித்தார். தர்மமே தான் இங்கும் சிறந்து விளங்குகிறது.

TRICHINOPOLY.
December 1951

தாஸன்,
K. SUNDARAM IYENGAR,

3685

THE TANJORE MAHARAJAH SERFOGI'S SARASWATHI MAHAL LIBRARY, TANJORE

கண்ணபிரான் பவர் பிரஸ், திருப்புத்தூர் R. D.

— கண்ணபிரான் —
பவர் பிரிண்டிங் பிரஸ்,
திருப்புத்தூர் R. D.